KAMARAJ COLLEGE (Autonomous)

Accredited with A+ Grade by NAAC

(Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli)

(3 Pages) **Reg. No: ……**

Question Code: 26OLT06 **Course Code : 25ULTL21**

UG Degree - End Semester Examinations, November 2026

Second Semester

PART I - TAMIL

Tamil Ilakkiya Varalaru - II

(For those who joined in June 2025 onwards)

Time : 3Hours **Maximum : 75 Marks**

பகுதி அ – (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளி

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக:

CO:1 K:1 1. தமிழில் முதலில் தோன்றிய குறவஞ்சி நூல் எது?

(அ) குற்றாலக் குறவஞ்சி (ஆ) பெத்தலகேம் குறவஞ்சி

(இ) அழகர் குறவஞ்சி (ஈ) சிதம்பரக் குறவஞ்சி

CO:1 K:1 2. மங்கைப் பருவத்தினை உடைய பெண்ணின் வயதினை அடையாளப்படுத்துக.

(அ) 14-19 (ஆ) 12-13

(இ) 20-25 (ஈ) 26-31

CO:1 K:1 3. போரில் பதுமமுகம் மலர்ந்தவர் யார்?

(அ) பேய் (ஆ) பெண்கள்

(இ) வீரர்கள் (ஈ) கீழோர்

CO:2 K:1 4. பனங்கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர்வாய் உள்ள பறவையைச் சுட்டுக.

(அ) காகம் (ஆ) நாராய்

(இ) மயில் (ஈ) வான்குருவி

CO:1 K:1 5. இனியொரு விதி செய்வோம் அதை
எந்த நாளும் காப்போம் - என்று கவிபாடியவர் யார்?

(அ) பாரதிதாசன் (ஆ) நாமக்கல் கவிஞர்

(இ) தமிழ் ஒளி (ஈ) பாரதியார்

CO:1 K:1 6. நேர்மையான புகழ் இலக்கிய கர்த்தாவுக்கு ஊக்கமளிக்கும் உணவு என்று எண்ணியவரைக் கண்டறிக.

(அ) சிங்கார வேலு (ஆ) சுந்தரம்

(இ) தபால்காரர் (ஈ) நாகப்பன்

CO:2 K:1 7. அமிர்தம் யாருடைய மகள்?

(அ) வேதாச்சலம் (ஆ) முருகேசன்

(இ) மூர்த்தி (ஈ) ஆனந்தன்

CO:2 K:1 8. கையில் கம்புடன் ஆயுதமேந்தி வந்த எழுத்தின் பெயரினைத் தேர்வு செய்க.

(அ) மெய்யெழுத்து (ஆ) குற்றியலிகரம்

(இ) ஆய்த எழுத்து (ஈ) குற்றியலுகரம்

CO:1 K:1 9. உறங்குகின்ற கும்பகர்ணா இனி கிடந்து உறங்குவாய் - இப்பாடல் வரி இடம் பெற்றுள்ள நூல் எது?

(அ) கம்பராமாயணம் (ஆ) மகாபாரதம்

(இ) பாஞ்சாலி சபதம் (ஈ) பெருங்கதை

CO:1 K:1 10. நஞ்சைப் போன்ற வஞ்சக எண்ணத்துடன் வந்தவள் யார்?

(அ) மண்டோதரி (ஆ) தாடகை

(இ) திரிசடை (ஈ) சூர்ப்பணகை

பகுதி ஆ – (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களுக்கு மிகாமல் விடையளி

CO:1 K:2 11. (அ) சிற்றிலக்கியம் என்றால் என்ன? சிற்றிலக்கியத்தில் இடம்பெற்றுள்ள தூது இலக்கியம் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) மரபுக் கவிதை இலக்கணம் பற்றித் தொகுத்துரைக்க.

CO:3 K:4 12. (அ) குற்றால மலையின் இயற்கை வளத்தை விளக்கியுரைக்க.

(அல்லது)

(ஆ) அபிராமி பட்டர் பட்டியலிடும் 16 வகையான செல்வங்களைப் பகுத்தாய்க.

CO:2 K:3 13. (அ) சிறுத்தையே வெளியில் வா கவிதையில் பாரதிதாசன் கையாளும் உவமையை அடையாளப்படுத்துக.

(அல்லது)

(ஆ) மீன்கள் கவிதையின் வாயிலாகக் கவிஞர் வெளிப்படுத்தும் ஏழை மக்களின் துயரங்களைக் கண்டறிக.

CO:5 K:5 14. (அ) தொல்காப்பியப் பூங்காவில் ஆய்த எழுத்து பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) வேலைக்காரி நாடகத்தில் ஆனந்தன் கதாப்பாத்திரத்தை ஆய்ந்துரைக்க.

CO:1 K:2 15. (அ) சிலம்பின் வழக்குரைகாதை பாடல் கருத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) அலுவலகக் கடிதம் பற்றி விவரி.

பகுதி இ – (5× 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளி

CO:5 K:5 16. (அ) சிற்றிலக்கியத்தின் வகைகள் கூறி எவையேனும் ஐந்து சிற்றிலக்கியங்களை மதிப்பீடு செய்க.

(அல்லது)

(ஆ) சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்க.

CO:1 K:2 17. (அ) கலிங்கத்துப் பரணியில் போர்க்களத்தில் வீரர்களின் தாக்கத்தை விவரிக்க.

(அல்லது)

(ஆ) தமிழ்விடுதூது நூலில் காணப்படும் தமிழ் மொழியின் பெருமையை விவரி.

CO:5 K:5 18. (அ) பாரதி வேண்டும் பாரத சமுதாயத்தைப் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) வாய்ச்சொற்கள் சிறுகதையில் ருக்மிணியின் தன்னம்பிக்கைப் பற்றி ஆய்க.

CO:5 K:3 19. (அ) வாய்ச்சொற்கள் சிறுகதையில் ருக்மிணியின் தன்னம்பிக்கைப் பற்றி ஆய்க.

(அல்லது)

(ஆ) தொல்காப்பியப் பூங்காவில் எழுத்து முதல் நூற்பாவை சான்றுடன் இயம்புக.

CO:3 K:4 20. (அ) கும்பகர்ணனைத் துயில் எழுப்பும் போது கம்பர் பாடிய பா நயத்தினை விமர்சிக்க.

(அல்லது)

(ஆ) தன் விவரக் குறிப்பினை நிறுவுக.